1979 அக்டோபர் 29]

தீர்த்தமலையை சுற்றுலா மையமாக்கல்.

வினா எண். 27— திரு. எச். ஜி. ஆறுமுகம், திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு செய்தி அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில் உள்ள தீர்த்த மலையினை சுற்றுலா மையமாக்கி, அங்கு சுற்றுலாப் பயணிகள் விடுதி ஒன்று கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :
(அ) மற்றும் (ஆ) தீர்த்தமலை மாவட்ட உலா தலங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இங்கு விடுதி கட்டும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, தீர்த்தமலையில் சுற்றுலா பயணிகள் விடுதி கட்டும் திட்டம் தற்பொழுது இல்லையென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். தங்கு வதற்கே வசதியில்லாத மலைப் பிரதேசம் அது. ஆகவே, அவசியம் விடுதி கட்டினால் தான் சுற்றுலா சென்டராக இயங்குவது கூட பயனளிக்க முடியும். அதே நேரத்திலே, அனுமன் தீர்த்தத்தில் டிஸ்ட்ரிக்ட் போர்ட் காலத்திலே கட்டப்பட்ட சாவடி இப் பொழுது பயனற்று இருக்கிறது. அதையும் புதுப்பிக்க அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தீர்த்தகிரி மலையில் சுற்றுலா விடுதி கட்ட தற்பொழுது சுற்று லாத் துறையிடம் பொருளாதார வசதி இல்லை. அடுத்த ஆண்டு மேற் கொள்ளும் திட்டங்களில் இதையும் பரிசீலிக்கலாம் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் பாவ புண்ணியங்களுக்கு கை மேல் பலன் அளிக்கும் வகையில் அந்தத் தீர்த்தமலை விளங்குவதாகச் சொல்லப்படு கிறது. ஏற்கனவே எல்லாச் சமூகத்தினரும் அங்கே விடுதி கட்டி யிருக்கிறார்கள். அவைகள் பழுதாகி விட்ட காரணத்தால், எல்லோருக்கும் உதவும் வகையில் விரைவாக அந்தத் திட்டத்தைக் கொண்டு வர அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மக்களின் பாவங்களைத் தீர்ப்பதற்கு அந்தத் தீர்த்தமலை இருக்கிறது என்று சொன்னால், அங்கே போகின்றவர்கள் அனைவரும் பாவங்களைச் செய்தவர்கள் என்று கருதப்படுவார்கள். அது. அங்கே நல்ல மருத்துவத் துறைக்குப் பயன்படுகிற மருந்து மூலிகைகளில் இருந்து உருவாகி வரும் தீர்த்தம் என்று பெயர் பெற்று இருக்கிறது. அதையொட்டி அதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, மக்களின் குறைகளைத் தீர்க்கும் ஸ்தலமாக அந்தத் தீர்த்தமலை விளங்குகிறது என்று நண்பர் சமரசம் அவர்கள் கூறினார்கள். அப்படி ஏதேனும் குறைகளை அங்கு சென்று அவர் தீர்த்து வைத்துக் கொண்டாரா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, யார் பாவத்தைச் செய்துவிட்டு, அதற்காக எங்கே போகிறார்கள் என்று அவர்களைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். அமைச்சர் அதற்கு பதில் அளிக்க முடியாது.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் சரியாகத்தான் இருக்கிறார் பதிலிலே, ஆளும் கட்சி உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள், அவரே டாக்டராக இருந்து கொண்டு பாவ புண்ணியங்களுக்குத் தீர்த்தமலை பற்றி விரிவாகக் கேட்டு இருக்கிறார். அவர் சுயமரியாதை இயக்கத்தைச் சேந்தவரா? அல்லது வேறு இயக்கத்தைச் சேர்ந்தவரா ?

(பதில் இல்லை.).

TRUTH ALONE TRIUMPHS

ஆலங்காயத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகம்.

வினா எண். 28— திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா ஆலங்காயத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தை திருப்பத்தூருக்கு மாற்றி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றி அமைக்கப்படும் ?